6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, 1990-91ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்றா வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன் வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள் ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்செய்தல்).

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால வாரிய (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.